*3*

# பிரசங்கியார்கள் மீது அளவுகடந்த விசுவாசத்தைக் கொண்டிருக்கும் ஒரு சபைக்கு தேவைப்படும் அறிவுரை

## (1 கொரிந்தியர் 3:1-23)

*ஒரு வேளை கொரிந்து சபையிலிருந்த பிரச்சனைக்கு முக்கியமான காரணம் பிரசங்கியார்களிடம் சபையார் கொண்ட அதிகப்படியான விசுவாசமே சபை அங்கத்தினர்கள் கிறிஸ்துவுக்குப் பதிலாக பிரசங்கியாரை பின்பற்றினார்கள் (1:12, 13), அவர்கள் "நான் பவுலைச் சேர்ந்தவன்" என்றும்; "நான் அப்பொல் லோவைச் சேர்ந்தவன்" என்றும்; "நான் கேபாவைச் சேர்ந்தவன்" என்றும் சொல்லிக் கொண்டார்கள். அவர்கள் மற்ற பிரசங்கியார்களைக் காட்டிலும் சிலரை உயர்வாக மதிப்பிட்டார்கள், அதற்கு அடிப்படையாக ஒவ்வொரு பிரசங்கியாருடைய பேச்சு வல்லமையை அல்லது சாதுரிய ஞானத்தை எடுத்துக் கொண்டார்கள். 1 கொரிந்தியர் 3ம் அதிகாரத்தில் பவுல் நேரடியாகவே இந்தப் பிரச்சனையை எதிர் கொள்கிறார்.அந்தச் சூழ்நிலையை பவுல் எப்படி கையாண்டார், மற்றும் அதே மாதிரியான பிரச்சனைக்கு இன்று நாம் எப்படி நிவாரணத்தை மேற் கொள்வது?*

## அப்பொழுது இருந்த பிரச்சனை

*அதிகாரம் 3 ன்ஆரம்பத்தில், பிரச்சனைக்கான காரணத்தை பவுல் சுட்டிக் காட்டுகிறார் (3:1-4).*

***பிரச்சனைக்கான அடிப்படைக் காரணிகள்: ஆன்மீக வளர்ச்சியின்மை***

*கொரிந்தியர்களிடம், பிரங்கியார்களை மையமாக வைத்து பிரிவினைகளைக் கொண்டிருக்கக் காரணம் ஆன்மீக வளர்ச்சியின்மையே என்று பவுல் சொன்னார். அவர்கள் ஆன்மீக விஷயத்தில் குழந்தைகளாயிருந்தனர். பெரியவர்களுக்கான போஜனத்தைக் கொடுக்க இயலாத அளவுக்கு அவர்கள் வளர்ச்சியில்லாமல் இருந்தபடியால், பாலையே தொடர்ந்து கொடுக்க வேண்டிய நிர்பந்தத்தில் அவர் இருந்தார்.*

*பவுல் இங்கே பேசும் உருவகத்தை நாம் புரிந்து கொள்கிறோம். இரண்டு பிள்ளைகள் ஒருவருக்கொருவர் யாருடைய தகப்பன்*

பலமானவர் அல்லது தைரியமானவர், அல்லது மிகவும் முக்கியமானவர் என்று அர்த்தமற்ற அமளி பண்ணிக் கொண்டிருப்பதை நாம் கற்பனை செய்து பார்ப்போம்: "என்னுடைய அப்பா உன்னுடைய அப்பாவைக் காட்டிலும் பெரியவர்!"; எனது அப்பா உன்னுடைய அப்பாவைக் காட்டிலும் பலமானவர்!"; "இல்லை, அவர் அப்படியில்லை!"; "ஆமாம் அவர் அப்படித்தான்!" இதே போல் தான் இந்த பெரியவர்களும் தங்கள் தங்கள் பிரசங்கியார்களைக் குறித்து அர்த்தமற்ற அமளி பண்ணிக்கொண்டிருந்தனர்: "பவுல் புத்திசாலி"; "இல்லை, அப்பொல்லோதான்"; "பேதுரு சிறந்த பேச்சாளர்"; "இல்லை, அவரல்ல!" ஆமாம், அவர்தான்; "அவர்தான்!" இப்படியாகத்தான் பிரசங்கியார்கள் மீது மித மிஞ்சிய விசுவாசத்தை நம்பிக்கையை கொண்டிருப்பதாக பவுல் கண்ணுற்றார்.

பவுல் அவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சியின்மையை அவர்கள் ஆவிக்குரியவர்களாயிராமல், மாம்சத்துக்குரியவர்களாயிருந்து *மனுஷ மார்க்கமாய் நடக்கிறார்கள் என்றும் "மாம்சம்," "மனுஷர்களாய் மட்டும்" போன்ற பதங்களால் விளக்கமளிக்கிறார்* (3:1, 3). ஒரு ஆவிக்குரிய மனுஷன் ஆவிக்குரிய காரியங்களில் அக்கரை காட்டும்போது பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டு தேவனுக்குப் பிரியமான வாழ்வை வாழ்கிறான். மாம்சத்துக்குரிய மனுஷன் ஆவிக்குரிய காரியங்களில் அக்கரை காட்டாமல் அக்கரையில்லாமல் மாம்ச ஆசைகளை மட்டும் நிறைவேற்றிக் கொள்ளக் கூடியவனாக இருப்பான். அப்படிப்பட்ட இச்சைகளுக்கு தன்னை அவன் உட்படுத்திக் கொள்வதால், அவனது ஜீவியமே பாவ நடத்தைக் குரியவைகளாயிருக்கிறது. "மனுஷீகத்தை மட்டும்" கொண்டவர்கள் பரிசுத்த ஆவியினால் வழி நடத்தப் படாமல், பூமிக்குரிய காரியங்களில் கவனம் செலுத்தினவர்களாக வாழ்வார்கள். குறிப்பிட்ட பிரசங்கியார்களைப் பின்பற்றுவது ஆவிக்குரிய வளர்ச்சியின்மையை நிரூபிக்கிறதும், "பொறாமை, சண்டைகள்" ஆகியவை "மாம்சத்துக்குரியவர்களாகவும்" "ஜென்ம சுபாவத்துக்குரியவர்களாகவும்" இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது என்று பவுல் கூறினார் (2:14).

**பிரச்சனைக்கான தீர்வு (1):**
**பிரசங்கியாரின் பணியை புரிந்து கொள்ளுதல்**

அடுத்து பிரசங்கியார்களிடம் மித மிஞ்சிய நம்பிக்கையை விசுவாசத்தை கொண்டிருப்பவர்களுக்கு பவுல் தீர்வை முன்வைக்கிறார். தாங்கள் தெய்வமாக எண்ணிக் கொண்டிருக்கும் பிரசங்கியார்களின் பணியைக் குறித்த உண்மையை புரிந்து கொள்ளுதலை தனது வாசகர்கள் பெற பவுல் அவர்களுக்கு உதவுகிறார். அவர் அவர்களை தேவனுக்கு "உடன் வேலையாட்கள்" என்றுஅழைக்கிறார் (3:9), மற்றும் பிரசங்கியார்கள் என்ன செய்கிறர்களென்றும், மற்றும் எப்படிச் செய்கிறார்கள் என்றும் அவர் 3:5-17 விளக்குகிறார். பிரசங்கியார்கள் "ஊழியக்காரர்கள்" மட்டுமே (3:5); அவர்கள் எஜமானர்களல்ல. ஜனங்களை விசுவாசிக்கச் செய்யும்படி அவர்கள் கர்த்தருக்கு ஊழியஞ் செய்கிறார்கள்.

சபையை இரண்டு வழிகளில் பவுல் படம் பிடித்துக் காட்டுகிறார். ஒவ்வொன்றிலும் பிரசங்கியார்களின் பங்கு குறித்து பேசினார்.

*முதலாவதாக, சபையை பண்ணையாகவும் சபை பணியாளர்களை வேலையாட்களாகவும் பவுல் குறிப்பிட்டார் (3:5-9)*, "நான் நட்டேன்" "அப்பொல்லோ நீர்ப் பாய்ச்சினான்" (3:6). என்று பவுல் சொன்னார், சிலர் ஒரு

வகையான வேலையையும், மற்றவர்கள் வேறுவகையான வேலைகளையும் செய்கிறார்கள். பிரசங்கியார்கள் அல்லது சில சுவிசேஷகர்கள் ஊழியத்தை துவக்குகிறதாகிய நடுகிறவைகளிலே திறமைசாலிகளாயிருக்கலாம்,[1] மற்றவர்கள் நீர் பாய்ச்சுவதிலே சிறப்பானவர்களாயிருக்கலாம், அல்லது ஏற்கனவே இருக்கிற சபைகளை கட்டியெழுப்பக் கூடியவர்களாயிருக்கலாம். எப்படியிருப்பினும் "தேவனே விளையச் செய்கிறார்" என்று பவுல் குறிப்பிட்டார். ஆதலால் வேலையாட்களால் ஒன்றுமில்லை நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை. "நடுகிறவனாலும் ஒன்றுமில்லை விளையச் செய்கிற தேவனாலே எல்லாமாகும்" (3:7)! தேவன் மட்டுமே மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார்.

மனுஷர்களைப் பின்பற்றுவோருக்கு இது என்ன பொருளைக் கொடுக்கிறது? தேவன் மாத்திரமே துதிகளுக்குப் பாத்திரமாயிருக்கிற படியால், அவர்களின் நாயகர்களொல்லாம் முக்கியத்துவமில்லாதவர்கள் என ஒப்புக் கொள்ள வேண்டிய நிர்பந்தத்தில் இருக்கிறார்கள். வேலையாட்கள் அனைவரும் சமமானவர்கள். ஒவ்வொருவரும் தங்களுக்குரிய பிரதி பலனை அடைவார்கள் (3:8), ஆனால் உண்டாகும் மகிமையனைத்தும் தேவனுக்கு மட்டுமே உரியது. எனவே தான் தனது வாசகர்களுக்கு எதை விளக்கப் படுத்த முயற்சிக்கிறாரோ அதை உறுதிபடுத்தும்படி: "நாங்கள் [பவுலும், அப்பொல்லோவும் மற்ற பிரசங்கியார்களும்] தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம்; நீங்கள் தேவனுடைய பண்ணையும், மாளிகையுமாயிருக்கிறீர்கள்" (3:9). என்றார்: இப்படியாக கொரிந்துவிலிருந்த கிறிஸ்தவர்களை "தேவனுடைய பண்ணை" என்று விளக்கமளித்தார்; அடுத்ததாக, அவர்கள் "தேவனுடைய மாளிகையாக இருக்கிறார்கள்" என்ற கருத்தை விரிவாக தெளிவாக பேசுகிறார்.

<u>இரண்டாவதாக, பவுல் சபையை உயர்வாக மதிப்பிடக் கூடிய மாளிகையாக படம் பிடித்துக் காட்டுகிறார் (3:9-17).</u> சபை மாளிகையாக இருக்குமேயானால் (3:9), பவுல் மற்றும் அப்பொல்லோ போன்றவர்களெல்லாம் வேலையாட்கள்[2]. பவுல் "ஒரு புத்தியுள்ள சிற்ப ஆசாரியைப் போல" அஸ்திபாரமிட்டார், மற்றவர்கள் அதன் மேல் கட்டினார்கள்.

கட்டுகிறவர்கள் எதன் மேல் என்னவிதமாய் கட்டுகிறார்கள் என்று பார்க்கக் கடவர்கள் என்ற பவுலின் சித்தரிப்பு எச்சரிக்கிறது (3:10). அஸ்திபாரம் இயேசுகிறிஸ்து (3:11).[3] சபையைக் கட்டிடம் போல் கட்டியெழுப்ப பயன்படுத்தப் படும் பொருட்கள் சபையின் அங்கத்தினர்கள்.[4] ஆறுவகை பொருட்கள் ("பொன், வெள்ளி, விலையேறப் பெற்ற கற்கள்"), மற்ற மூன்று ("மரம், புல், வைக்கோல்") பற்றி குறிப்பிடுகிறார். சாதாரணமானவைகள். இவைகள் அனைத்தும் அக்கினியினால் பரிசோதிக்கப்படும் (3:12, 13). விலையேறப் பெற்றவைகள் அக்கினியால் பாதிக்கப்படாது, மற்றவைகளோ வெந்து போகும் என்று பவுல் அர்த்தப்படுத்தினார்.

3:13ல் குறிப்பிடப்படுகிற அக்கினியை நியாயத்தீர்ப்பு நாளுக்கோ நரக அக்கினிக்கோ ஒப்பிடக் கூடாது.[5] மாறாக, முதல் நூற்றாண்டில் பொதுவாக இருந்த பயங்கரமான சோதனைகளைக் குறித்து பவுல் பேசுகிறார். சில வேலைகளில் உபத்திரவங்கள் கிறிஸ்தவர்களைப் பலப்படுத்தியது; மற்ற வேளைகளில் அது சகோதரர்களை விழப் பண்ணியது. வித்தியாசத்தை ஏற்படுத்துவது எது? கிறிஸ்தவர்கள் எதினால் உருவாக்கப் பட்டிருக்கிறார்கள் -

பொன், வெள்ளி, விலையேறப்பட்டக்கல் போன்றவற்றின் தாங்கும் தன்மையா? அல்லது மரம், புல், வைக்கோல் போன்ற பலவீனமான தன்மையா?

ஒரு நபர் கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தும் பொருட்களின் அக்கினி பரிசோதனைக்குப் பின்பு மீதமுள்ளதைப் பொருத்து அவனவனுடைய வேலைக்கான கூலியைப் பெறுவான் (3:14). அவர் கட்டின கட்டிடம் அழிந்து போனால் - அவனுடைய வேலைப்பாடு நஷ்டப்பட்டால் - அவன் நஷ்டமடைவான், ஆகிலும் அவன் இரட்சிக்கப்படுவான் (3:15). 3:14, 15ல் பேசப்படும் "கூலி" "நஷ்டம்" என்பவை இந்த வாழ்க்கைக்குரியவைகளைப் பற்றிப் பேசுகிறது. தான் மத மாற்றிய மக்கள் சோதனையிலும் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருந்தால் அந்தப் பிரசங்கியார் மிகவும் அதிகமான திருப்தியை உணருவார். அவர் போதித்த ஜனங்கள் மறுபடியும் உலகத்துக்கே திரும்புவதையும் தனது கடின உழைப்பு பிரயோஜனமற்றுப் போனதையும் கண்ணுறும்போது அவர் மிகப் பெரிய நஷ்டமடைவார். ஆனால் தான் செய்த வேலை தோல்வியடைந்தாலும், தமது சுய இரட்சிப்பை இம்மையிலும் மறுமையிலும் இழந்துவிடமாட்டார். நம்முடைய விசுவாசம் நாம் போதித்து ஞானஸ்நானப் படுத்திய மக்களின் நேர்மையில் இல்லை.

பிரசங்கியாருக்கு ஏற்படும் பிரதிபலன் அல்லது அவர் மனமாற்றி மக்களால் வரும் நஷ்டம் ஆகிய வார்த்தைகளை பவுல் பின்வருமாறு வலியுறுத்துகிறார்: "அவனவன் தான் இந்த விதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக் கடவன்" (3:10)! முதலாவதாக, நாம் ஞானமுள்ளவர்களாய்க் கட்டுவோமானால், பவுலைப் போல நாமும் "புத்தியுள்ள [திறமைமிகுந்த] சிற்பாசாரிகளாய் [கட்டிடம் கட்டுவோராய்]" காணப்படுவோம். இரண்டாவதாக, நமது பிரயாசங்கள் ஒன்றுமில்லாமற் போய், நஷ்டத்தைக் காணாதபடிக்கு எச்சரிக்கையாயிருப்போம். தேவன் நமக்குக் கொடுத்துள்ள நல்லபுத்தியை பயன்படுத்தி அவரது பணியை சிறப்பாய் செய்வோமாக.

பவுலும் மற்ற பிரசங்கியார்களும் கட்டியெழுப்ப பிரயாசப்படும் கட்டிடத்தின் தன்மையையும் அடையாளப்படுத்தினார்: தேவனுடைய ஆலயம் (3:16). கட்டப்பட்டதை - தேவனுடைய ஆலயத்தை - ஒருவர் கெடுத்தால் தேவன் அவரை கெடுப்பார் (3:17). "தேவனுடைய ஆலயமே" சபை (எபேசியர் 2:21, 22 - ஐக் காண்க).[6] பவுல் சபையில் பிரிவினைகளை ஏற்படுத்துகிறவர்கள் சபையை அழிக்கிறார்கள், அதற்கு பதிலாக தேவன் அவர்களை அழிப்பார்.

இந்தக் கணக்கீடு கொரிந்துவிலிருந்த பிரசங்கியார்களிடம் சபையார் கொண்டிருந்த அதிகப்படியான விசுவாசமாகிய பிரச்சனையைத் தீர்க்க எவ்வகையில் உதவியாயிருக்கும்? முதல் உருவகமாகப் பயன்படுத்தப்பட்ட சபையை பண்ணைக்கு ஒப்பிட்டது போலவே, பிரசங்கியார்களை முக்கியப்படுத்திப் பார்க்காமல், விளையச் செய்கிற கர்த்தரை முக்கியப் படுத்த சொல்லப் பட்டது போலவே - இங்கே சபையை ஒரு மாளிகையாகவும் - பிரசங்கியாரை மையப்படுத்திப் பார்க்காமல் கட்டப்பட்ட கட்டிடமாகிய (சபையை) மையப்படுத்தி அதன் மீது ஒளி வீசும்படி இந்த ஒப்பீடும் கூறப்பட்டது: அதாவது சபையைக் குறித்தும் அதன் ஒவ்வொரு தனி அங்கத்தினர்களையும் கட்டிடமாக கூறப்பட்டது. தேவன் வாசம் பண்ணும் ஆலயம் சபைதானே ஒழிய, பிரசங்கியார்களல்ல! எனவே சபை அங்கத்தினர்கள் தான் பிரசங்கியார்களுக்கு அளிக்கப் போகிற கூலியையோ அல்லது நஷ்டத்தையோ தீர்மானிக்கிறார்கள்

எனவே, *கொரிந்து சபையார் மாளிகை கட்டுவதற்கு காரணமாயிருந்த பிரசங்கியார்களைக் காட்டிலும் அதிகமாக, கட்டிடமாக (மாளிகையாக) சபையாக,* தேவனுடைய ஆலயமாக மதிக்கப் படுகிறார்கள்.

***பிரச்சனைக்கானத் தீர்வு (2):***
***ஞானத்தைப் பற்றிய சரியான விளக்கம்***

அடுத்து, பவுல் தனது நிருபத்தில் அடிக்கடி குறிப்பிடுகிற - உலகத்துக்குரிய ஞானம் தேவனுக்கு முன்பாக ''பைத்தியமாய்'' இருக்கிறது என்பதை மறுபடியும் போதிக்கிறார் (3:18-20).

மனிதனுடைய ஞானம் தேவனுக்கு பைத்தியமாய்த் தோன்றுகிறது, மற்றும் தேவனுடைய ஞானமே மனிதனுக்கு பைத்தியமாய் இருக்கிறது.[7] ஆதலால் ஒருவர் உண்மையிலேயே (தேவனுடைய பார்வையில் ) ஞானியானால் (மனிதனுடைய பார்வையில்) அவர் பைத்தியமாய்க் காணப்படத் தான் வேண்டும், பைத்தியமாய் தோன்றுகிற சிலுவையைப் பற்றிய உபதேசத்தைஅவர் ஏற்றுக் கொண்டிருக்கிறார் (1 கொரிந்தியர் 1:21).

இந்த கருத்து பிரசங்கியார்களிடம் கொண்டுள்ள மித மிஞ்சிய சபையார் விசுவாசத்திற்கு இரண்டாவது ஆலோசனையாகச் சொல்லப்படுகிறது. கொரிந்தியர்கள் உண்மையான ஞானத்தை புரிந்து கொள்வார்களாகில், பிரசங்கியார்களின் சாதுரியத்தையும் ஞானத்தையும் அளவீடுகளாகக்கொண்டு ஒப்பிடுவதை விட்டு விடுவார்கள். இந்த அளவீடு கிரேக்க - ரோம உலகில் ஏற்றுக் கொள்ளப் பட்டது; ஆனால் கிறிஸ்தவர்கள் பவுலையும், அப்பொல்லோவையும், கேபாவையும், மற்றவர்களையும் தேவனுடைய செய்தியாளர்கள் என்று மட்டும் அறிய வேண்டியவர்களாயிருந்தனர்.

***பிரச்சனைக்கான நிவாரணம் (3):***
***கிறிஸ்தவர்களுக்கு உண்டாயிருந்த உடமைகளைக் குறித்த பாராட்டு***

பிரச்னைக்கான மூன்றாவது நிவாரணம் 3:21-23ல் காணப்படுகிறது. பிரசங்கியார்களை சபையார் பின்பற்றி நடப்பதைக் குறித்த பிரசங்கத்தின் நிறைவாக பவுல், சொல்லுகிறதாவது, “இப்படியிருக்க ஒருவனும் மனுஷரைக் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பானாக; எல்லாம் உங்களுடையதே” (3:21). என்று கூறி தனது கருத்தை முடிவுக்கு கொண்டு வருகிறார், கிறிஸ்தவர்கள் ஏன் மனுஷரைக் குறித்து மேன்மை பாராட்டக் கூடாது? “ஏனெனில் எல்லாம் உங்களுடையதே'' - பவுலும் அப்பொல்லோவும், கேபாவும் கூட இதிலே சில திறமையான பிரசங்கியார்கள் தன்னைப் பின்பற்றி வருபவர்களை பிரித்து கொண்டு சென்றது, அநேகமாக எல்லா சபையின் பெரிய பிளவுகள் ஏற்படக் காரணமாக இருந்தது. உட்பட்டவர்கள் எனும் பொருளில் கூறுகிறார் (3:22). அந்த சகோதரர்கள் ''நான் பவுலை அல்லது அப்பொல்லோவை அல்லது கேபாவைச் சேர்ந்தவனென்று சொன்னதன் விளைவாக இப்படிச் சொல்லப் பட்டது. அதற்கு மறுமொழியாக பவுல், ''நீங்கள் பவுலையோ, அப்பொல்லோவையோ, கேபாவையோச் சேர்ந்தவர்களல்ல. மாறாக அவர்கள் உங்களுடையவர்கள்!''[8] மனுஷரைக் குறித்து நீங்கள் மேன்மை பாராட்டும் போது, நீங்கள் உங்களுடைய சொந்த உரிமைகளை உண்மையில்விட்டுக் கொடுக்கிறீர்கள், உங்கள் உடமைகளையே நீங்கள் பாராட்டுகிறீர்கள்.

*கொரிந்து சபையார் "எல்லாம் அவர்களுடையது" என்று புரிந்து கொள்ள வேண்டியவர்களாயிருந்தனர் (3:21) என்பது தேவன் சபையின் அனு கூலத்துக்காக எதையும், எல்லாவற்றையும் பயன்படுத்தக் கூடும் என்ற பொருளில் கூறப்பட்டது.*[9] *எல்லாம் தேவனுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றன.*

*அப்படி என்றால் பிரசங்கியார்களைப் பின்பற்றுவதன் கருத்து என்ன? கொரிந்தியர்கள் தனிப்பட்ட பிரசங்கியார்களை பின்பற்ற வேண்டிய அவசியமில்லை ஏனெனில் பிரசங்கியார்கள் தேவனுடைய பார்வையின் கீழ் இருப்பதால், அவர்கள் சார்பாக அவரே எல்லாவற்றையும் செயல்படுத்துகிறார். இதனிமித்தம் எந்த பிரசங்கியார் சாதனை புரிந்தாலும் மகிழ்ச்சி தெரிவிக்க வேண்டுமேயல்லாது தனக்கு பிடித்தமான பிரசங்கியாரை மட்டும் செய்யும் செயலுக்காக சந்தோஷப் படலாகாது, அவர்கள் பவுலை விரும்பினாலும், அப்பொல்லோவின் ஊழியத்தாலும் அவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறார்கள். எல்லா பிரசங்கியார்களும் அனைவருக்கும் உடையவர்களானபடியால், அவர்கள் எந்த தனிப்பட்ட பிரசங்கியாரையும் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை!*

## இன்றைய பிரச்சனை

*பிரசங்கியாரிடம் கொண்டுள்ள மிகையான நம்பிக்கை விசுவாசம் இன்றும் பிரச்சனைக்குறியதா? சில திறமையான பிரசங்கியார்கள் தன்னைப் பின்பற்றி வருபவர்களை பிரித்து கொண்டு சென்றது, அநேகமாக எல்லா சபையின் பெரிய பிளவுகள் ஏற்படக் காரணமாக இருந்தது.*

### *நிலைத்திருக்கும் பிரச்சனை*

*பிரிவு (நாமகரணக்) சபைகளும், உபதேச முறைகளும் பெரிய அளவில் எழும்ப தனிப் பட்டவர்களின் செல்வாக்கே காரணமாயிருந்துள்ளன. ஜனங்கள் மார்டின் லூத்தரைப் பின்பற்றி லுத்தரன் கூட்டமாக மாறினர், அல்லது ஜான் கால்வினை பின்பற்றி கால்வின் பிரிவுகளாயினர். இன்றைய மார்க்க உலகிலும் பிரசித்தி பெற்ற பிரசங்கியார்களினால் ஜனங்கள் அவரைச் சேர்ந்த கூட்டங்களாக போய்க் கொண்டுள்ளனர். கர்த்தருடைய சபையும் இந்த பிரச்சனையிலிருந்து தப்பவில்லை. கிறிஸ்தவர்களில் சிலர் ஒருவரைப் பின்பற்றவும், சிலர் மற்றொருவரை பின்பற்றியும் சென்று பிரிவினையை ஏற்படுத்தும் ம னோபாவத்தை எப்பொழுதும் உடையவர்களாக இருக்கின்றார்கள்.*

*இப்படிப்பட்ட எண்ணங்களால் உள்ளூர் சபைகள் இரண்டு துண்டுகளாக பிளக்கப் பட்டுள்ளன. உதாரணமாக, பிரசங்கியார் பணியிலிருந்து விலகிப் போகும்படி மூப்பர்கள் தீர்மானிக்கிறார்கள், எனவே அவர் தனது ஊழிய பணியை ராஜினாமா செய்யச் சொல்லுகிறார்கள். அவர் அமைதியாக போக மறுத்தால், அவரைப் பின் பற்றிப்போவோர் அவருடைய காரியத்துக்காக ஒன்று சேர்ந்து கொள்வர். இதன் விளைவாக சபையானது பிளவுபடும்! கிறிஸ்தவர்களின் எந்தச் சண்டையிலும் ஜெயிப்பது சாத்தான் மட்டுமே!*

### இன்றுள்ள நிவாரணம்

*மிகையான நம்பிக்கை/விசுவாசம் பிரசங்கியார்களிடம் கொண்டிப்பதால் பிரிவினைப் பிரச்சனை இன்றைக்கும் இருக்கிறது. அதைக் குறித்து என்ன செய்யலாம்? 1 கொரிந்தியர் 3ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட பிரசங்கத்தில்*

இருந்து தொடங்கலாம்.

*1. ஆவிக்குரியவர்களாய் இருக்க வேண்டியவர்கள் மாமிச எண்ணமுள்ளவர்களாகி, பிரசங்கியார் மீது மிகுந்த நம்பிக்கை/விசுவாசம் கொண்டிருப்பது வளர்ச்சியின்மையின் அறிகுறி. நாம் வளர்ந்து ஆவிக்குரிய முதிர்வை எட்ட முயற்சிக்க வேண்டும்.*

*2. சபையின் வளர்ச்சியை பிரசங்கியார் உறுவாக்குவதில்லை; தேவனே விளையச் செய்கிறார் மற்றும் மகிமை அவருக்கே! பிரசங்கியார் திராட்சைத் தோட்டத்து வேலையாளாயும், மாளிகையாகிய தேவனுடைய ஆலயத்தைக் கட்டுபவர்களாயும் மற்றும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிப்பவராகவும் இருக்கின்றார். அவர் நடுகிறார், நீர் பாய்ச்சுகிறார், கட்டுகிறார், மற்றும் பிரசங்கிக்கிறார்; பிறகு அறுவடை வருகிறது. பிரசங்கியார் பணியில் நாம் மகிழ்ந்து களி கூரலாம், அவரது திறமையை கொடுத்த தேவனுக்கு நன்றி செலுத்துங்கள், தேவனுக்கே மகிமையை ஏறெடுங்கள்.*

*3. நமக்குப் பிரியமான பிரசங்கியாரைவிட மற்ற பிரசங்கியார்கள் அதிகமாக கவனிக்கப்படும்போது, "பொறாமையும் பேதங்களும்" (3:3) காட்டாமல், ஒவ்வொரு பிரசங்கியாரின் ஊழியத்திற்காகவும் நாம் நன்றியுள்ளவர்களாய் இருப்போம். ஒரு கருத்தில் அவர்கள் எல்லாருமே நமக்குரியவர்களே. எந்த ஒரு பிரசங்கியாராலும், எந்த ஒரு நல்ல காரியமும் அடையப்பட்டால், அது நமக்கு பிரயோஜனமுள்ளதாய் இருக்கிறது, மற்றும் நாம் அதற்கு நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்!*

## முடிவுரை

*பிரசங்கியாருக்கு மித மிஞ்சிய விசுவாசத்தை/நம்பிக்கையை காட்டுகிற பிரச்சனைக்கு, நாம் யாரை பின்பற்றுகிறோம் என்பதை நினைவுபடுத்திக் கொள்வதையும் உள்ளடக்குகிறது. நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள்! தேவ செய்தியாளர்கள் கிறிஸ்துவை அறிந்து கொள்ளச் செய்யும் செய்தியை தேவனுக்கு நாம் அறியும்போது, நாம் அருகில் சமீபிக்கிறோம், எனவே அவர்களுக்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்துவோம். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவினிடத்தில் கொண்டிருக்கும் கவனத்தை பிரசங்கியார்கள் தங்கள் பக்கம் திருப்ப அனுமதிக்கக் கூடாது. அப்படிச் செய்வோமானால், மனக் கவலையும், பிரிவினையும் ஆபத்துக்களுமே நமக்காக காத்திருக்கும். பவுலையோ, அப்பொல்லோவையோ கேபாவையோ அல்லது வேறு எந்த மனுஷரையுமோ நாம் பின்பற்றாமல் - கிறிஸ்துவை நாம் பின்பற்றுவோம்!*

---

*குறிப்புகள்*

*[1]பவுலின் ஊழியம் மற்றும் நன்கொடை. (ரோமர் 15:21 காணவும்.) [2]மாளிகையை "கட்டும் வேலையாட்கள்" எனும் சொல்லானது இந்த வசனப்பகுதியில் பவுல், அப்பொல்லோ மற்றும் சபையைக் கட்ட உதவும் எந்த கிறிஸ்தவனையும் உட்படுத்திப் பேசப்படுகிற பிரசங்கியார்களையும் போதகர்களையும் குறிக்கும். [3]மத்தேயு 16:13-19ஐ ஒப்பிடுவோமாகில், கிறிஸ்துவிலுள்ள தனது விசுவாசத்தை பேதுரு செய்த அறிக்கையே சபையின் அஸ்திபாரம் என்று சொல்லப் படுகிறது. "கிறிஸ்துவையும், அவர் சிலுவையில் அறையப்பட்டதையும்," பவுல் பிரசங்கித்ததின் மூலம் கொரிந்துவில்*

*அஸ்திபாரமிட்டார். இந்த அஸ்திபாரம் கிறிஸ்துவையும் சபையையும் குறித்த எல்லா சரியான உபதேசக் கோட்பாடுகளை உள்ளடக்கியது.* [4]*கட்டிடம்கட்ட தேவைப்படும் பலவிதமான பொருள்கள் வித்தியாசமான வகைகளான சபை அங்கத்தினர்களைக் குறித்த விளக்கமாகும்.* (Richard E. Oster, Jr., *1 Corinthians,* The College Press NIV Commentary [Joplin, Mo.: College Press Publishing Co., 1995], 98; James Burton Coffman, *Commentary on 1 and 2 Corinthians* [Austin, Tex.: Firm Foundation Publishing House, 1977], 47-48.) *சிலர் இந்தப் பொருட்களைக் குறித்து முரண்பாடான கருத்துக்களைச் சொல்லி, உபதேசங்களிலும் கிறிஸ்தவர்கள் ஜாக்கிரதையாக கட்ட வேண்டிய அவசியத்தை எளிமையான பொருளில் விளக்கமளிப்பர்.* [5]*"நாளானது" எனும் பதம் (3:13), இரண்டாம் வருகையின் நாளைக் குறிப்பதாக பெரும்பாலான திருமறை விளக்கவுரையாளர்கள் நம்புகிறார்கள் - அதாவது, கிறிஸ்து மறுபடியும் வருகிற நாள், நியாயத் தீர்ப்பின் நாள்* (Leon Morris, *The First Epistle of Paul to the Corinthians,* The Tyndale New Testament Commentaries [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1973], 68). *எப்படியிருப்பினும், 3:14, 15ல் சொல்லப்பட்டுள்ள "கூலி" "நஷ்டம்" ஆகிய வார்த்தைகளைப் பற்றி சொல்லப்பட்டுள்ள விளக்கமே அவற்றைப் புரிந்துகொள்ள போதுமானது. மேலும், "அக்கினி" யானது பரீட்சைக்கு அல்லது சோதனைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (1 பேதுரு 1:7ல்). "நாள்" என்பது "நியாயத்தீர்ப்பு நாளையும்," குறிப்பதாக இருந்தால், "கூலி," "நஷ்டம்" ஆகிய வார்த்தைகள் விளக்கம் அளிக்கப்பட முடியாதவைகளாகவோ அல்லது பரலோகத்தில் அளிக்கப்படும் பிரதிபலன்களில் வித்தியாசங்கள் காணப்படுவது போலாகும்.* [6]*3:16, 17ல் சொல்லப்பட்டுள்ள "தேவாலயம்" எனும் பதம், கிறிஸ்தவர்களின் மாம்சப் பிரகாரமான சரீரத்தை குறிப்பதாக பெதுவான விளக்கம் அளிக்கப்பட்டு வந்தாலும், பிரதானமாக அதைக் குறிப்பதில்லை.* [7]*தனது கருத்தை நிரூபிக்க பவுல் இரண்டு பழைய ஏற்பாட்டு வசனப் பகுதிகளை மேற்கோளிட்டு காட்டுகிறார். வசனம் 19ல் யோபு 5:12, 13 லிருந்தும்; வசனம் 20ல் சங்கீதம் 94:11 லிருந்தும் எடுத்துக் காட்டுகிறார்.* [8]William Barclay, *The Letters to the Corinthians,* The Daily Study Bible, 2d. ed. (Edinburgh: St. Andrews Press, 1954; reprint, Philadelphia: Westminster Press, 1956), 39. [9]*எல்லாமும் "தேவ நோக்கங்களுக்கென்றும் அவருடைய மீட்கப்பட்ட மக்களுடன் சம்பந்தப்பட்ட திட்டங்கள் என்றும் ... எல்லாம் விசுவாசிகளின் பிரயோஜனத்திற்காக, எல்லாம் அவர்களுடையது என்ற வகையில் நோக்கப்பட வேண்டும்"* (W. Harold Mare, "1 Corinthians," in Frank E. Gaebelein, ed., *The Expositor's Bible Commentary*, vol. 10, *Romans-Galatians* [Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1976], 209) *ரோமர்* 8:38, 39 *ஐ ஒப்பிடவும்.*